# AD LIMINA என்னும் நமது ஆயர்களின்
# உரோமை பீடத்திற்க்கான வருகையை முன்னிட்டு
# (4 – 9 பிப்ரவரி 2018)

இறைமக்களுக்கு,

“AD LIMINA” வருகை என்பதனை “ad limina apostolorum” என்று அழைப்பார்கள். அதாவது உரோமையில் வேத சாட்சிகளாக உயிர் துறந்த பவுல் மற்றும் பேதுரு ‘‘அப்போஸ்தலர்களின் வாயிலுக்கு வருகையளித்தல்’’ என்பதாகும். இந்த வருகை வட்டார ஆயர்களால் (மலேசியா, சிங்கப்பூர், புருணை) மேற்கொள்ளப்படுகிறது. இந்த வருகையில் கார்தினல், பேராயர்கள் மற்றும் ஆயர்கள் என மறைமாவட்டத்திற்கு பொறுப்பேற்றிருக்கும் இவர்கள் பங்குக்கொள்வர். பாரம்பரியமாக, இந்த வருகையின் போது ஒவ்வொரு மறைமாவட்ட ஆயரும், அப்போஸ்தலரான தூய பேதுருவின் வாரிசான தலைமை ஆயர் பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்றிருக்கும் அனைத்துலக கத்தோலிக்க திருச்சபையிடமிருந்து ஊக்கமும் வழிகாட்டுதலும் பெற்றுக் கொள்கின்றனர்.

மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உரோமை பீடத்திற்க்கான வருகை (Ad Limina) எதிர்வரும் பிப்ரவரி 4 முதல் 9,2018 வரை இடம் பெறும்.

Ad Limina வருகை மூன்று பகுதிகளைக் கொண்டது.

முதல் பகுதி, தனித்தனியாக தூய பேதுரு மற்றும் பவுல் ஆகியோரின் கல்லறைகளுக்கு வருகையளித்தல். Ad Limina வருகையில் மிகவும் ஆன்மீகமான மற்றும் ஊக்கமளிக்கும் தருணம் இது. காரணம், இன்றைய ஆயர்கள் அப்போஸ்தலர்களின் வாரிசுகள் ஆவர் (ஆயர்கள், பேராயர்கள் மற்றும் கார்தினல்கள்).

இரண்டாம் பகுதி, திருத்தந்தையுடன் சந்திப்பு. இச்சந்திப்பு 8/12/18 அன்று இடம் பெறும். பேதுருவின் வாரிசான பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களிடம் கார்தினல், பேராயர்கள் மற்றும் ஆயர்கள் அனைவரும் தங்களின் விசுவாசம் மற்றும் கீழ்படிதல் வாக்குறுதிகளை புதுபித்துக் கொள்வார்கள். அத்துடன் திருத்தந்தையின் போதனைகளைப் பெற்றுக் கொண்டு தங்களின் மறைமாவட்டம் குறித்த அறிக்கையை தனித்தனியே வாய்மொழியாக சமர்ப்பிப்பார்கள். இவ்வாறு ஆயர்கள், பேராயர்கள், கார்தினல் ஆகியோர் பாப்பரசருடனும் ஒருவர் மற்றவருடனும் ஐக்கியத்தை வெளிப்படுத்த வாய்ப்பாக அமைகிறது.

முன்றாம் பகுதி, பல்வேறு உரோமை நிர்வாக அலுவலகங்களுக்கு வருகைப்புரிதல், இந்த வருகையின் போது வத்திகான் செயலகத்தில் எழுத்துப்பூர்வமான அறிக்கைச் சமர்ப்பிக்கப்படும். ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கு தகவல் அறியும் கேள்வித் தாட்களை வத்திகான் அனுப்பி வைக்கும். இந்த ஐந்தாண்டு அறிக்கையில், மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருவானவர்கள், திருத்தொண்டர்கள், துறவறத்தார், பொதுநிலையினர் ஆகியோரைப் பற்றி புள்ளிவிரங்கள் மற்றும் விளக்கம் அளிக்கப்படும். மறைமாவட்டத்தின் அருள் வாழ்வு நிலை, மறைமாவட்டத்தின் நிதிநிலை, முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சிகள், சிறைச்சாலைப் பணி, குடும்ப வாழ்வு, மறைப்பரப்பு, கிறிஸ்துவ ஒற்றுமை, சமயங்களுக்கு இடையில் உரையாடல்,

கத்தோலிக்க மறைப்பரப்பு பள்ளிகளிலும் பங்குகளிலும் மேற்க்கொள்ளப்படும் கத்தோலிக்க கல்வி, தீவிர மறைப்பரப்பு முயற்சி, செயல்படாத மற்றும் திருச்சபையை சாராத நிலை, தற்போதைய தேவ அழைத்தல் நிலை கடந்த அறிக்கைக்கு பிறகு எதிர்க்கொண்ட சவால்கள் மற்றும் வெற்றிகள் குறித்தும் இந்த அறிக்கையில் இடம் பெறும்.

இதே கண்ணோட்டத்தில்தான் இன்றைய வாசகம் நம்மோடு உறையாடுகிறது. ‘‘காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்’’. இந்த வருகையை ஆசீர்வதிப்பதாக இன்றைய வாசகம் அமைந்துள்ளது. இது கடவுள் குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேறியுள்ளது. இந்த வருகை அருகிலுள்ள இறையாட்சிக்கு விதையாகும். கார்தினல், பேராயர்கள், ஆயர்கள், ஓய்வுபெற்ற ஆயர்கள், பேராயர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரும் கடவுளின் அன்பை இறைவார்த்தை பொழிவதின் வழியாக பெற்றுக்கொள்வர். பேதுருவின் பீடத்தில் அமர்ந்துள்ள திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களுடனான சந்திப்பு உறுதியான இறையாசீர் அனுபவத்தை நமக்கு அளிக்கும்.

பேதுருவின் திருப்பீடத்தை நோக்கிய பயணம், இல்லத்திற்க்கு திரும்பும் பயணமாகும், மனம் திரும்புதலின் கண்ணோட்டத்திலும் இதைக் காணலாம். இது புதுப்பித்தல் மற்றும் சிந்தனை மாற்றத்திற்கான அழைப்பு. அனைத்துலக திருச்சபை கிறிஸ்துவின் ஒரே உடல் என்பதனையும் திருத்தந்தை மற்றும் பல அலுவலகங்களைச் சந்திப்பதின் வழியாக கிறிஸ்துவைச் சந்திக்கும் புது அனுபவத்தைப் பெறலாம். நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன். இவ்வாறு, நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பீர் எனவும் நீர் என்மீது அன்பு கொண்டுள்ளது போல் அவர்கள் மீதும் அன்பு கொண்டுள்ளீர் எனவும் உலகு அறிந்துக்கொள்ளும்’’.

கடவுளின் அரசு நம் மத்தியில் இருக்கிறது என்பது நமது நம்பிக்கை. எனவே, இறை இயேசுவைச் சந்தித்ததனால் நற்செய்தியைத் தொடர்ந்து பறைச் சாற்றுகின்றோம். இந்த சந்திப்பு நம்மை வெளியேறி சென்று, எங்கெல்லாம் நாம் இருக்கின்றோமோ அங்கு விசுவாச சமூகங்களை உருவாக்கிட அழைக்கிறது. இறுதியில் இயேசுவுடனான நமது அன்றாட சந்திப்பு நம்மை எதிர்நோக்கு கொண்ட மறைப்பரப்பும் சீடர்களாக உருமாற்றும்.

நிறைவாக, அனைத்து கத்தோலிக்க மக்களுக்கும் வாழ்த்துக்கள். செபம் மற்றும் ஒருமைப்பாட்டின் வழி நாம் Ad Limina வருகையின் ஒரு பகுதி என்ற உணர்வுடன் ‘‘ஒரே தூய கத்தோலிக்க அப்போஸ்தலிக்க திருச்சபையை’’ விசுவாசிக்கிறேன் என ஒவ்வொரு வாரமும் அறிக்கையிட்டு கொண்டாடுகிறோம். நமது நம்பிக்கை இயேசுவிடமிருந்து அப்போஸ்தலர்கள் வழியாக வழங்கப்பட்டது. இந்த பாரம்பரியத்தை தொடர அப்போஸ்தலர்களுக்கும் ஆயர்களுக்கும் மிகப்பெறும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பணியை தொடர்ந்து மேற்கொள்வதற்க்கு உடல் மற்றும் ஆன்மீக ரீதியாக இந்த வருகை முக்கிய மையில் கல்லாக அமைகிறது. தூய ஆவியானவர் நமக்கு வல்லமை தருவாராக மற்றும் அன்னை மரியாள் நமக்காக பரிந்துப் பேசுவாராக.

இறை ஒற்றுமையில்,

ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்

பினாங்கு மறைமாவட்டம்

3-வது ஞாயிறு ஆண்டவரின் திருக்காட்சிக்கு பிறகு: 20-21 ஜனவரி 2018

வாசகங்கள்: யோனா 3 1-5,10

1 கொரிந்தியர் 7: 29-31

மாற்கு 1: 14-20